**நிர்வாகச் சட்டத்தில்**

# இயற்கை நீதிக் கோட்பாடு

# Principles of Natural Justice

**(சட்டடத்தரணி கனக நமநாதன்)**

நிர்வாகச் சட்டத்தைப் புரட்டிப் பார்த்தால் பக்கசார்புத் தன்மை (Bias mentality) இயற்கை நீதிக் கோட்பாட்டுத் தத்துவத்தில் (Principles of Natural Justice) பாரதுாரமான ஒரு நீதியற்ற நிலைமையை குறிக்கின்றது. தற்போது இயற்கை நீதிக் கோட்பாடு உண்மையை வெளிக் கொணர சகல நிர்வாக சபைகள் நிர்வாக அதிகாரிகள் மட்டத்தில் பாவிக்கப்படும் ஒரு தத்துவம்.

19ம் நுாற்றாண்டு ஆரம்பத்தில் இங்கிலாந்தில் பொதுச்சட்டப்படி இக்கோட்பாடு நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கே பிரயோகிக்கப்பட்டுள்ளது. பின்னரான காலத்தில் இவ் இயற்கை நீதிக்கோட்பாட்டை நீதிமன்றங்கள் மாத்திரமன்றி நீதி அதிகாரங்களை செலுத்துகின்ற நிர்வாக சபைகளும் நிர்வாக அதிகாரிகளும் கடைப்பிடிக்க வேண்டும் என விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இவற்றைக் கடைப்பிடிக்காது கட்டளை பிறப்பித்தால் அல்லது தீர்மானம் எடுத்தால் மேல் நீதிமன்றில் Ultra virus என்ற தத்துவத்தின் அடிப்படையில் கொடுத்த நீதிமன்றக் கட்டளையையோ அல்லது நிர்வாக சபையின் தீர்மானத்தையோ வலுவற்றது எனத் தீர்ப்புப் பெறமுடியும். எந்த அதிகாரிகளும் தமது கடமையின் போது தமக்கு சட்டத்தினால் கொடுக்கப்பட்ட தற்றுணிபு நீதி அதிகாரங்களை பிரயோகிக்குமிடத்து இயற்கை நீதிக்கோட்பாட்டை கடைப்பிடித்தே முடிவுகளை எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்கள்.

ஆனால் ஏதாவதொரு நியதிச்சட்டத்தில் இயற்கை நீதி கோட்பாடு கடைப்பிடிக்கத் தேவையில்லை என வெளிப்படையாக கூறப்பட்டிருந்தால் தவிர சகல நிர்வாகத் துறையினரும் தமது நீதிசார்ந்த கடமைகளை புரியும்போது இயற்கை நீதியை கடைப்பிடிக்க வேண்டியது முக்கியம். இது இரண்டு விதிகளைக் கொண்டது.

1. **Bias - பக்கச்சார்பு.** No man a judge in his own course தன் வழக்கிற்கு தானே நீதிபதியாக இருக்கமுடியாது. அதாவது ஒரு பிரச்சினையை விசாரித்து முடிவெடுப்பவர் ஒரு பக்கச் சார்பானவராக இருக்கக்கூடாது.

2. **Hear both sides – இரு பக்கங்களையும் கேள்.** ஒரு உண்மையை அறிய இருபக்க கட்சிக்காரர்களின் விளக்கத்தையும் கேட்டறிதல் வேண்டும். ஒரு பக்கத்து கட்சியினரை மட்டும் விசாரித்து முடிவெடுக்கக் கூடாது.

1. **Bias – பக்கச்சார்பு தன்மை:** முடிவு எடுப்பவர் நீதிபதியோ, நீதி செலுத்தும் நிர்வாக அதிகாரியோ அவருக்கு பிணக்கில் சம்பந்தப்பட்ட ஒரு கட்சிக்காரர் உறவினராகவோ, நட்புக் கொண்டவராகவோ, கொடுக்கல் வாங்களில் ஈடுபட்டவராகவோ அல்லது வேறு ஏதாவது விதத்தில் இருவரும் தொடர்புள்ளவராகவோ இருந்தால் அப்பிணக்கை அந்த நீதிபதியோ அல்லது நிர்வாக அதிகாரியோ விசாரிக்க முடியாது. ஏனெனில் அவர் பக்கச் சார்பாக முடிவெடுக்க முடியும் என நீதி அனுமானிக்கும்.

ஒரு பிணக்கு சம்பந்தமான புலன்விசாரணையில் ஈடுபட்ட ஒரு அதிகாரி பின்னர் அந்தப் பிணக்குக்கு தீர்வு வழங்க நியமிக்கப்பட்ட குழுவில் ஒரு உறுப்பினராக சேர்க்கப்பட்டது பக்கச்சார்பான விளக்கமாக கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டது. **பக்கச்சார்பு பற்றிய பரிசோதனைகள்** : விசாரிப்பவர் பக்கச்சார்பு கொண்டவரா இல்லையா என அறிவது சம்பந்தமாக இரண்டு பரிசோதனைக் கொள்கைகள் காணப்படுகின்றன. அவற்றை பிரயோகிப்பதில் நாட்டுக்கு நாடு நீதிமன்றுக்கு நீதிமன்று என தீர்ப்புக்களில் மாறுபாடு உள்ளன. பக்கச்சார்பு என்பது உண்மையில் நிருபிக்கப் படவேண்டும் (Real likelihood test) என்று சில நீதிமன்றுகளும் பக்கச்சார்பு இருப்பதாக நியாயமான சந்தேகம் காணப்படுமிடத்து ( Reasonable suspicion test) பக்கச்சார்பு கொண்டது என்றும் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்துள்ளன. இங்கிலாந்தில் ஒரு வழக்கில் நியாயமான சந்தேகம் என்ற கொள்கையில் தீர்ப்பளித்த நீதிபதி 'Justice is not only to be done , it must be seen to be done' எனக் கூறினார். ஆனால் இலங்கையில் பக்கச்சார்பு நேரடியாக நிருபிக்கப்படுதல் வேண்டும் என்ற Real likelihood test பாவிக்கப்பட்டு வருவதாக பல தீர்ப்புகள் வெளிகாட்டுகின்றன.

2. **Hear both sides** - இரு பக்கமும் கேள் : விசாரணை செய்பவர் இரு பக்கத்து கடசிக்காரர்களுக்கும் அவர்களினது கருத்துக்களையும் வாதங்களையும் தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

**Right to notice** – அதனால் இரு கட்சிக்காரர்களுக்கும் அறிவித்தல் கொடுபடல் வேண்டும். விசாரணை ஆரம்பிக்க முன்னோடியாக அவர்களுக்கு விசாரணை ஒன்று நடைபெறவுள்ளது என்பதையும் அவருக்கு எதிரான சாட்சியங்களையும் ஆவணங்களையும் விசாரணை எப்போ எவ்விடத்தில் நடைபெறும் என்ற விபரத்தையும் தெரிவிக்க வேண்டும். அறிவித்தல் கொடுக்கும்போது விசாரணைக்கு முன் நியாயமான போதிய கால அவகாசம் கொடுக்கப்படல் வேண்டும். ஒரு வழக்கில் 'கொடுக்கப்பட்ட வெறும் ஐந்து நாள்' அவகாசம் முற்றாக நியாயமற்றது என தீர்க்கப்பட்டது.

**Right to be heard - Oral hearing** -வாய்மூலமாக தனது சாட்சியத்தை பதிய முன்வைக்கலாம். விசாரணை நடபடி முறைகள் கட்டாயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும். சான்று கட்டளைச் சட்டப் பிரிவுகள் பின்பற்றப்பட வேண்டும். இவ்வாறு ஆரம்ப காலத்தில் சட்டம் இறுக்கமான நிலைப்பாட்டில் இருந்தது. ஆனால் நீதி செலுத்தும் நிர்வாக சபைகளில் காலம் போகப்போக வழக்குத் தீர்ப்புகளில் இருந்த இறுக்கமான நிலைமைகள் தளர்த்தப்பட்டு கட்டாயமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற பூரணமான நடபடிமுறைகள் எதுவும் இல்லை என்றும் வழக்கின் சூழ்நிலை, நியதிச் சட்டத்தில் உள்ளபடி ஒழுங்கு விதிகள், விசாரணையின் தன்மை, விளைவின் தன்மை போன்றவற்றை பொறுத்து விசாரணை நடபடிமுறைகள் மாறுபடும் என்ற புதுக் கருத்து உருவாக்கப்பட்டுள்ளது. விசாரணை சம்பந்தமான நடைமுறைகள் நாட்டுக்கு நாடு வித்தியாசமாக கடைப்பிடிக்கின்றதை அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்கா வழக்கொன்றில் இறுக்கமான விசாரணை நடபடிமுறைகளை முன்வைத்ததாக காணப்படுகின்றது. கட்சிக்காரர் தமது வாதத்தை அல்லது எதிர் வாதத்தை வாய்மூலமாகவோ அல்லது ஆவணச்சான்றுகளை அணைத்தோ வாதிடலாம் என்றும் அத்துடன குறுக்கு விசாரணை தேவைப்படின் மேற்கொள்ளப்படலாமென்றும் அதனால் முழுதான நிகழ்வுகளின் உண்மையை வெளிக்கொணரலாம் எனவும் ‘Administrative procedure Act of 1946 என்ற சட்டவாக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இங்கிலாந்திலோ இலங்கையிலோ அவ்வாறான குறிப்பான சட்டமெதுவும் இல்லை. ஒவ்வொரு வழக்கிலுமுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப தகுதியானதாக நிர்வாக விசாரணைக் குழுவே கைக்கொள்ளப்போகும் விசாரணை நடபடிமுறைகளை தீர்மானிக்க முடியும் என்ற நெகிழ்ச்சியான கருத்தே காணப்படுகின்றது. தீர்ப்புக்கான காரணம் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட வேண்டும். விசாரணைக் குழுவிலுள்ள அங்கத்தவர்கள் விசாரணை நடைபெற்ற சகல நாட்களிலும் பங்குபற்றியிருக்க வேண்டும். விசாரணைகள் நீதிமன்றில் நடைபெறுவது போன்று குறுக்கு விசாரணைகள் இறுக்கமான நடைபடிமுறைகள் கைக்கொள்ளப்படவேண்டியது அவசியமில்லை எனவும் வழக்குத் தீர்ப்புகள் கொடுபட்டுள்ளன. சூழ்நிலை, அந்த பிணக்கு பற்றிய நியதிச்சட்டம், ஒழுங்கு விதிகள், விசாரணையின் தன்மை. விளைவின் தன்மை போன்றவற்றைப் பொறுத்து நடபடிமுறை பற்றி விசாணைக்குழு முடிவெடுக்கும் என பல வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. விடயம் குறித்த நியதிச் சட்டத்தில் ஏதாவது நடபடிமுறைகள் கூறப்பட்டிருப்பின் அவை கடைப்பிடிக்கப்பட வேண்டியது கட்டாயம் எனவும் தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது. அத்தோடு விசாரணையின் போது சான்று கட்டளைச் சட்ட ஏற்பாடுகள் கட்டாயமாக கடைப்பிடிக்கப்படத் தேவையில்லை எனவும் தற்போதைய வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக்குழு அங்கத்தவர்கள் அணைவரும் சகல விசாரணை நாட்களிலும் பங்குபற்றியிருக்க வேண்டும். விசாரணைகளை அவர்கள் அவதானித்துக் கொண்டு

வந்திருந்திருக்க வேண்டும் என்பதும் மாற்றமடைந்து விசாரணையில் வழங்கப்படும் சாட்சியங்களை சொல்லுக்கு சொல் அச்சிடப்பட்டு அதன் பிரதிகள் சகல விசாரணை குழு அங்கத்தவர்களுக்கும் வழங்கப் பட்டிருக்குமாயின் சில அங்கத்தவர் சில விசாரணை நிகழ்வுகளில் பங்குபற்றியிராவிட்டாலும் பிரதிகளை அவர்கள் வாசித்து விபரங்களை கிரகித்திருப்பார்கள் என்ற நிலைமையில் ஒருசில விசாரணைகளில் பங்குபற்றாதிருந்து தீர்ப்பு கொடுப்பதில் பங்குபற்றி இருப்பது பிழையானதல்ல என ஒரு வழக்கில் கூறப்பட்டது.

கீர்ப்புக்காண காரணங்கள் கூறப்பட்டிருக்க வேண்டும். அவை எழுத்தில் பதியப்பட வேண்டும். மேன்முறையீடு அல்லது மீளாய்வு செய்யும்போது இந்த நடைபடிமுறைகள் உதவும் எனக் கூறப்பட்டுள்ளது..

இருந்தாலும் அமைச்சர் ஒருவர் கொள்கை ரீதியாக ஒரு தீர்மானத்தை எடுக்கும்போதும் அந்த விடயம் சம்பந்தப்பட்ட நியதிச் சட்டத்தில் வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ இயற்கை நீதிக் கோட்பாடு கடைப்பிடிக்கத் தேவையற்றது என தெரிவிக்கப்பட்டிருந்தால் இயற்கை நீதிக் கோட்பாடு கடைப்பிடித்தல் அவசியமற்றது. இதன் காரணம் பாராளுமன்றம் மீயுயர்ந்தது என்பதால் அது இயற்றும் நியதிச் சட்டத்தில் இயற்கை நீதிக் கோட்பாட்டு விதிகள் கடைப்பிடிக்கத் தேவையில்லை என்ற அர்த்தப்பட வாசகம் அமைந்திருந்தால் அவ்வாறே விசாரிக்கப்பட வேண்டும்.

பின்னரான காலத்தில் சட்ட வல்லுனர்களின் கட்டுரைகளின்படி இயற்கை நீதிக் கோட்பாடு மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது. G.L. பீரிஸ் இவ்விடயம் பற்றிய தனது சட்டப் புத்தகமொன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

'ஆங்கில வழக்குகள் பலவற்றில் அண்மைக்கால தீர்ப்புகளை பார்க்கும்போது இயற்கை நீதிக் கோட்பாடுகள் நீதித்துறை மருவிய நீதித்துறை ஆகியவற்றின் விசாரணை நடபடிக்கைக்கு ஏற்புடையது மட்டுமல்லாமல் நிர்வாகத்துறை உள்ளூராட்சி சபைகளின் விசாரணைகளுக்கும் விஸ்தரிக்கப்பட்டிருப்பதோடு பக்கச்சார்பு இருபக்கமும்கேள் எனற எல்லைக்குள் மட்டுமல்லாது fair dealing , fair procedure நேர்மை, நியாயம், பாரபட்சமில்லாத விசாரணையும் நடைமுறையும் என்ற அர்த்தமுள்ள பதங்களாலும் விரிவாக்கப்பட்டுள்ளது.' எனக் குறிப்பிட்டுள்ளார்.